| | | |
|---|---|---|
| சாட்சி : DW 1<br>திரு.குழந்தை<br>த/பெ.திரு.பெரியசாமி | அ.வ.எண். 72/2018 | 06.07.2026 |

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) தாவா கிராமத்தில் எனக்கு எத்தனை வீடுகள் உள்ளன என்றால் 2 வீடுகள். மேற்படி வீடுகள் என்ன வீடுகள் என்றால் இரண்டுமே ஓட்டுவில்லை வீடுகள். மேற்படி 2 வீடுகளின் ஒவ்வொன்றின் பரப்பு என்ன என்றால் ஒரே வீட்டை இரண்டாக தடுத்து பிரித்துள்ளேன். ஒரே வீட்டை இரண்டாக தடுத்து பிரித்த வீட்டின் மொத்த சதுர பரப்பு எவ்வளவு என்றால் தெரியாது. எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் முகவரி பகுதியில் கதவு எண்.31/17 என்று காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு படிக்க தெரியாததால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2) அப்படியானால் எனக்கு படிக்க தெரியாததால் எனது வீட்டின் கதவு எண் என்ன என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள மனுக்களின் பிரமாண வாக்குமூலங்களில் கதவு எண்.31/17 ம், பி.சா.ஆ.11 வீட்டு வரி ரசீதுகளில் கண்ட கதவு எண். 7/184-1, 7/184 வீடுகள், பி.சா.ஆ.13 சொத்து வரி ரசீதுகளில் கண்ட கதவு எண்.9/18, 9/284 வீடுகள் ஆகியவை ஒன்று என்பதை நிரூபிக்க வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) மேற்படி கதவு எண்களில் என்னுடைய வீடு உள்ளது என்பதை, தொடர்புடைய ஊராட்சி செயலரை விசாரித்தால் தெரிய வரும் என்றால் சரிதான். பி.சா.ஆ.13 சொத்து வரி ரசீதுகள் எனது மகன் பெரியசாமி பெயரில் உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.13 சொத்து வரி ரசீதுகளில்

கண்ட வீடு மேற்படி ஓட்டுவில்லை வீட்டையே குறிக்கும் என்றால் சரிதான். நான் சொல்வது போல் வீடு எதுவும் இல்லை என்றாலும், முன்னுக்குபின் முரணான மூன்று கதவு எண்களை கொண்ட வீட்டு வரி ரசீதுகளை தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4) இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையரை நியமித்து வழக்கு சொத்தை நில அளவையர் உதவியுடன் பார்வையிட்டால் வழக்கு சொத்து காலியிடமா அல்லது வீடு உள்ளதா என்ற உண்மை விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். பொதுவாக, தீர்வை ரசீது என்பது விளை நிலங்களுக்கும், காலியாக உள்ள நிலங்களுக்கும் கொடுக்கப்படும் ரசீது என்றால் சரிதான். பி.சா.ஆ.11 வீட்டு வரி ரசீதுகள் வரிசையில் 2013–2014 ஆண்டிற்கான ரசீதில் நாள் என்ற காலத்தில் 07.03.2016 என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) மேற்படி திருத்தத்தை செய்தது யார் என்றால் எனக்கு தெரியாது. பி.சா.ஆ.11 வீட்டு வரி ரசீதுகள் வரிசையில் 2008–2009 ஆண்டிற்கான ரசீதில் குழந்தைவேல் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். என்னுடை பெயர் குழந்தைவேலா அல்லது குழந்தையா என்றால் குழந்தைவேல், குழந்தை என்றும் அழைப்பார்கள். பி.சா.ஆ.11 முதல் 13 வரையிலான ஆவணங்களுக்கும் , இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

6) பி.சா.ஆ.11 வேண்டுமென்று எனக்கேற்றார்போல் திருத்தம் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.11, 12 ஆவணங்களை எனது மகன் தான் தாக்கல் செய்யமுடியும் என்றாலும், நான் தாக்கல் செய்ய எவ்வித முகாந்தரமும் இல்லை என்றாலும் சரியல்ல.

பி.சா.ஆ.11 ல் கண்ட பெரியசாமி என்பது எனது மகனை குறிக்கும் என்றால் சரிதான். வழக்கிற்கு பின்னிட்ட 12.04.2025 ல் பி.சா.ஆ.14 மின்கட்டணம் அட்டையை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.14 தாவா சொத்திற்குரியதா என்பதை மின்வாரிய அலுவலர்களை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான்.

7) எனது எதிர்வழக்குரையிலோ, முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலோ, பி.சா.ஆ.14 மின்கட்டணம் அட்டை குறித்து குறிப்பிடாத நிலையில், அதனை தாக்கல் செய்ய எனக்கு முகாந்தரம் இல்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.15 LIC PREMIUM ரசீதுகள் வரிசையில் பின்புறம் எழுதியுள்ளது யார் என்றால் தெரியாது. நான் அவசர நிலையில் எவ்வித வாதுரைகளும் இன்றி, பி.சா.ஆ.15 LIC PREMIUM ரசீதுகளை தாக்கல் செய்துள்ளதால் அவை செல்லத்தக்கது அல்ல என்றாலும், மேற்படி ரசீதுகள் வழக்கு சொத்திற்கு தொடர்பில்லாதவை என்றாலும் சரியல்ல.

8) பி.சா.ஆ.16 பட்டா பாஸ்புத்தகம் பட்டா எண். 1896 கூட்டுரிமை என கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கூட்டுரிமையில் கண்ட பிற உரிமையாளர்களில் வாதி வெங்கடேசும் ஒருவர் என்றால் தெரியாது. பி.சா.ஆ.16 பட்டா பாஸ்புத்தகத்தில் பக்கம் 3 ல், 6 வது காலத்தில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்களை எழுதியது யார் என்றால் தெரியாது, மேற்படி ஆவணம் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்தது.

9) பட்டாபாஸ்புத்தகம் வழங்கும்போது தொடர்புடைய விவரங்களை நிரப்பி அதற்கு கீழே கிராம நிர்வாக அலுவலர் முத்திரையுடன் கையொப்பம் செய்தே கொடுக்கப்படும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பி.சா.ஆ.16 பட்டா பாஸ்புத்தகத்தில், கிராம நிர்வாக அலுவலர்

முத்திரையோ, கையொப்பமோ இல்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்றார்போல் பி.சா.ஆ.16 பட்டா பாஸ்புத்தகத்தில் பக்கம் 3 ல், 6 வது காலத்தில் எழுத்துக்களை எழுதிஅதனை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

10) பி.சா.ஆ.17, 18 ஆவணங்களில் முரண்பாடான கதவு எண்கள் காட்டப்பட்டுள்ளது என்றாலும், மேற்படி ஆவணங்களும் வழக்கு சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றாலும், எனது கட்சி ஏற்றுகொள்ளத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.